# பகுதி-அ (தமிழ்)

# Part-A (Tamil)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

1. வேர்ச்சொல்லுக்குரிய வினையெச்சம் இடம்பெறாத இணையைத் தேர்ந்தெடுக்க.
   (A) வா - வந்து
   (B) காண் - கண்ட
   (C) கொள் - கொண்டு
   (D) நில் - நின்று
   (E) விடை தெரியவில்லை

2. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க.
   வாழியர்
   (A) வாழ்
   (B) வாழி
   (C) வா
   (D) வாழிய
   (E) விடை தெரியவில்லை

3. ஒரு பொருள் தரும் பல சொற்கள் "நெருப்பு"
   (A) அனல், கனல்
   (B) தணல், வெயில்
   (C) தண்ணீர், தீ
   (D) வெயில், குளிர்
   (E) விடை தெரியவில்லை

4. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளை கண்டறிக.

| | அலை | அளை |
|---|---|---|
| (A) | கூப்பிடு | தயிர் |
| (B) | நத்தை | சேறு |
| (C) | துன்பம் | சோறு |
| (D) | கடல் | பாம்புப்புற்று |
| (E) | விடை தெரியவில்லை | |

5. விலை, விளை, விழை போன்ற சொற்களுக்குச் சரியான பொருள் வேறுபாட்டைத் தேர்வு செய்க

(A) உண்டாக்குதல், விரும்பு, பொருளின் மதிப்பு

(B) விரும்பு, பொருளின் மதிப்பு, உண்டாக்குதல்

(C) விரும்பு, உண்டாக்குதல், பொருளின் மதிப்பு

(D) பொருளின் மதிப்பு, உண்டாக்குதல், விரும்பு

(E) விடை தெரியவில்லை

6. கீழ்க்கண்டவற்றுள் திசைச்சொற்களைக் கண்டறிக :

(A) மண், பொன்

(B) சாவி, சன்னல்

(C) அழுவம், வங்கம்

(D) விடம், மடம்

(E) விடை தெரியவில்லை

7. 'சமுதாயம்' என்ற வடசொல்லின் நேரான தமிழ்ச்சொல்

(A) மன்பதை

(B) குழாம்

(C) நெறி

(D) உண்மை

(E) விடை தெரியவில்லை

8. பிழை திருத்தம்

சந்திப் பிழை அற்ற வாக்கியங்களைக் கண்டறிக.

1. பிறநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தமிழகச் சிற்பங்கள் தனித்தன்மையுடன் திகழ்கின்றன.

2. பிறநாட்டுச் சிற்பங்களை காட்டிலும் தமிழக சிற்பங்கள் தனிதன்மையுடன் திகழ்கின்றன.

3. முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம்.

4. முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களை புடைப்புச் சிற்பங்கள் எனலாம்.

(A) 1 மற்றும் 3
(B) 3 மற்றும் 4
(C) 2 மற்றும் 3
(D) 1 மற்றும் 4
(E) விடை தெரியவில்லை

9. உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
'தாமரை இலை நீர்போல'

(A) ஏமாற்றம்
(B) பற்றுதல் இன்றி
(C) ஏற்றம்
(D) இரக்கம்
(E) விடை தெரியவில்லை

10. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) தாய்தந்தை – உம்மைத்தொகை
(B) பொற்றொடி வந்தாள் – உவமைத்தொகை
(C) பனைமரம் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை
(D) வளர்தமிழ் – வினைத்தொகை
(E) விடை தெரியவில்லை

11. சொல்லுக்குரிய பொருளை அறிக.

பொம்மல்

(A) பொம்மை

(B) சோறு

(C) பொம்மலாட்டம்

(D) பொதும்பல்

(E) விடை தெரியவில்லை

12. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.

குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்

(A) குறிஞ்சி, மருதம் நிலங்கள்

(B) மருதம், நெய்தல் நிலங்கள்

(C) குறிஞ்சி, நெய்தல் நிலங்கள்

(D) முல்லை, பாலை நிலங்கள்

(E) விடை தெரியவில்லை

13. வினைகளின் பொருள் வேறுபாடு அறிந்து பொருள் கூறு.

விலை - விளை

(A) உண்டாக்குதல் - பொருளின் மதிப்பு

(B) பொருளின் மதிப்பு - விரும்பு

(C) உண்டாக்குதல் - விரும்பு

(D) பொருளின் மதிப்பு - உண்டாக்குதல்

(E) விடை தெரியவில்லை

14. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்.

கரிகாலன் கல்லணையைக் கட்டினான்

(A) செய்வினை வாக்கியம்

(B) செயப்பாட்டு வினை வாக்கியம்

(C) தன்வினை வாக்கியம்

(D) பிறவினை வாக்கியம்

(E) விடை தெரியவில்லை

15. கீழ்க்கண்டவற்றுள் செயப்பாட்டு வினைத்தொடர் எது எனக் கண்டறிக.

(A) ஓட்டுநரா பேருந்தை இயக்கினார்?

(B) ஓட்டுநர் பேருந்தை இயக்கினார்.

(C) ஓட்டுநரால் பேருந்து இயக்கப்பட்டது.

(D) ஓட்டுநர் பேருந்தை இயக்கவில்லை

(E) விடை தெரியவில்லை

16. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக.

(A) பூங்குழலி திருக்குறள் கற்றள்

(B) பூங்குழலி திருக்குறள் கற்கவில்லை

(C) பூங்குழலி திருக்குறள் கற்றாளா?

(D) பூங்குழலி திருக்குறள் கற்பித்தாள்

(E) விடை தெரியவில்லை

17. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
தூது இலக்கியம் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது.

(A) தூது இலக்கியம் எவ்வகையைச் சார்ந்தது?

(B) சங்க இலக்கியத்தை சார்ந்ததா?

(C) தூது இலக்கியம் எக்காலத்தைக் குறிக்கிறது?

(D) சங்க மருவிய கால நூல்கள் என்னென்ன?

(E) விடை தெரியவில்லை

18. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
எங்கள் வீட்டில் தக்காளி இல்லை

(A) உங்கள் வீட்டில் இருக்கிற தக்காளி எவ்வளவு?

(B) உங்கள் வீட்டில் தக்காளி இருக்கிறதா?

(C) தக்காளி வீட்டில் இருக்கிறதா?

(D) தக்காளி உங்கள் வீட்டில் எவ்வளவு இருக்கிறது?

(E) விடை தெரியவில்லை

19. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.

திருக்குறள் 1330 குறள்பாக்களைக் கொண்டுள்ளது.

(A) திருக்குறள் எத்தனை குறள்பாக்களைக் கொண்டுள்ளது?

(B) திருக்குறள் அதிகாரங்கள் எத்தனை?

(C) திருக்குறள் எதற்கான குறள்களைக் கொண்டுள்ளது?

(D) திருக்குறளை இயற்றியவர் யார்?

(E) விடை தெரியவில்லை

20. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) கிளி, தையல், மனிதன், தேனீ

(B) கிளி, மனிதன், தையல், தேனீ

(C) கிளி, தேனீ, தையல், மனிதன்

(D) தையல், தேனீ, கிளி, மனிதன்

(E) விடை தெரியவில்லை

21. பொருத்துக :

(a) உழைப்புக்கு கொடுப்பது — 1. குரல்

(b) உரிமைக்கு கொடுப்பது — 2. உணவு

(c) கவலைக்கு கொடுப்பது — 3. கூலி

(d) பசித்தவனுக்கு கொடுப்பது — 4. விடை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

22. சொற்களை ஒழுங்குபடுத்துக

'முறையாகப் பண்டமாற்று வணிகம் தொடங்கியது'

(A) வணிகம் பண்டமாற்று முறையாகத் தொடங்கியது

(B) பண்டமாற்று வணிகம் தொடங்கியது முறையாக

(C) முறையாகத் தொடங்கியது பண்டமாற்று வணிகம்

(D) வணிகம் தொடங்கியது பண்டமாற்று முறையாக

(E) விடை தெரியவில்லை

23. சொற்களை ஒழுங்குபடுத்துக.

"செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் இருக்கிறோம் இப்போது நாம்"

(A) இப்போது இருக்கிறோம் செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் நாம்

(B) இருக்கிறோம் செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் நாம் இப்போது

(C) இருக்கிறோம் நாம் இப்போது செயற்கை நுண்ணறிவுக் காலத்தில்

(D) நாம் இப்போது செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் இருக்கிறோம்

(E) விடை தெரியவில்லை

24. பொருத்தமான காலம் அமைத்தல்

சரியானத் தொடரைத் தேர்ந்தெடு

(A) மாலனை கந்தன் வீழ்த்தினான் (இறந்த காலம்)

(B) மாலனை கந்தன் வீழ்த்துவான் (நிகழ்காலம்)

(C) மாலனை கந்தன் வீழ்த்துகிறான் (எதிர்காலம்)

(D) மாலனை கந்தன் வீழ்த்திச் சென்றான் (நிகழ்காலம்)

(E) விடை தெரியவில்லை

25. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கு.

ஆடு - சரியான சொல்

(A) கன்று

(B) குட்டி

(C) குழவி

(D) குருளை

(E) விடை தெரியவில்லை

26. சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.

விளையாட்டு, பறவை, பாட்டு, திடல்

(A) பறவை பாட்டு

(B) பாட்டு விளையாட்டு

(C) விளையாட்டுத் திடல்

(D) பறவை விளையாட்டு

(E) விடை தெரியவில்லை

27. சரியான எழுத்து வழக்கினைக் கண்டறிக:

தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சது

(A) தேங்கா உழுந்து மண்டை உடைந்தது

(B) தேங்காய் விழுந்து மண்ட உடைந்தது

(C) தேங்காய் விழுந்து மண்டை உடைந்தது

(D) தேங்காய் விழுந்து மண்டை உடைஞ்சது

(E) விடை தெரியவில்லை

28. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்ந்தெடு.

(A) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

(B) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

(C) வறட்சி அனைத்து இடங்களையும் பாதித்துள்ளது

(D) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

(E) விடை தெரியவில்லை

29. பின்வரும் தொடர்களில் எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிக.

(A) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமல் போவாது

(B) தேர்வெழுத வேகமாகப் போங்க் நேரமானால் பதட்டமாயிரும்

(C) காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்

(D) காலத்துக்கேத்த மாதிரி புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்

(E) விடை தெரியவில்லை

30. தனிச் சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும் போது

(A) அரைப்புள்ளி

(B) முக்காற்புள்ளி

(C) ஒற்றை மேற்கோள் குறி

(D) இரட்டை மேற்கோள் குறி

(E) விடை தெரியவில்லை

31. குடந்தை என வழங்கப்படும் ஊர்ப் பெயரைக் கண்டறிக

(A) குடுமியான் மலை

(B) கும்பகோணம்

(C) குற்றாலம்

(D) குடவாசல்

(E) விடை தெரியவில்லை

32. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) திருச்சிராப்பள்ளி - திருச்சி

(B) புதுக்கோட்டை - புதுவை

(C) மயிலாப்பூர் - மயிலம்

(D) நாகர்கோவில் - நாகை

(E) விடை தெரியவில்லை

33. இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

'எக்ஸ்பெரிமென்ட்'

(A) செய்முறை
(B) சோதனை
(C) பரிசோதனை
(D) உற்றுநோக்கல்
(E) விடை தெரியவில்லை

34. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்

செக்

(A) காசோலை
(B) வரைவோலை
(C) பணத்தாள்
(D) பற்று அட்டை
(E) விடை தெரியவில்லை

35. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டு பொருத்துக.

(a) Cabinet — 1. எல்லை
(b) Cultural — 2. மனிதநேயம்
(c) Humanism — 3. பண்பாடு
(d) Boundaries — 4. அமைச்சரவை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

36. உடன்பட்டுக் கூறும் விடை என்பதை கீழ்வருவனவற்றுள் எந்த விடையைக் கூறலாம்?

(A) உற்றது உரைத்தல் விடை
(B) நேர்விடை
(C) இனமொழி விடை
(D) உறுவது கூறல் விடை
(E) விடை தெரியவில்லை

37. விடை எத்தனை வகைப்படும்? விடை வகைகள்

(A) இரண்டு
(B) ஆறு
(C) எட்டு
(D) ஐந்து
(E) விடை தெரியவில்லை

38. அலுவல் சார்ந்த கலைச் சொல்லை கண்டறிந்து எழுதுக.

ஸ்டேப்ளர் (Stapler)

(A) மை பொதி
(B) மடிப்புத் தாள்
(C) கம்பி தைப்புக் கருவி
(D) கோப்பு
(E) விடை தெரியவில்லை

39. அலுவல் சார்ந்த கலைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

ரப்பர் ஸ்டேம்ப் (Rubber Stamp)

(A) கோப்பு
(B) இழுவை முத்திரை
(C) மடிப்புத்தாள்
(D) கம்பி தைப்புக் கருவி
(E) விடை தெரியவில்லை

40. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச்சொல்)

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) உருபன் - உரேபன்
(B) ஒலியன் - ஒலியன்
(C) பேரகராதி - பேராகராதி
(D) ஒப்பிலக்கணம் - ஒப்பில் இலக்கணம்
(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியினைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.

நெல்லை மாநகரில் உள்ள தெருக்கள் பல அதன் பழமைக்குச் சான்றாக உள்ளன. காவற்புரைத் தெரு என்று ஒரு தெரு உள்ளது. காவற்புரை என்றால் சிறைச்சாலை. அரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் இங்குச் சிறை வைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது. மேலவீதியை அடுத்துக் கூழைக்கடைத் தெரு உள்ளது. கூலம் என்பது தானியத்தைக் குறிக்கும். கூலக்கடைத் தெரு என்பதே மருவிக் கூழைக்கடைத் தெரு என வழங்கப்படுகிறது. அக்கசாலை என்பது அணிகலன்களும் பொற்காசுகளும் உருவாக்கும் இடம். முற்காலத்தில் பொன் நாணயங்கள் உருவாக்கும் பணியாளர்கள் வாழ்ந்த பகுதி அக்கசாலைத் தெரு என்னும் பெயரில் அமைந்துள்ளது.

நெல்லை நகரின் மேற்கே பேட்டை என்னும் ஊர் உள்ளன. வணிகம் நடைபெறும் பகுதியைப் பேட்டை என வழங்குதல் பண்டைய மரபு. இப்பகுதி முன்பு பெருவணிகம் நடைபெற்ற இடமாக இருந்திருக்க வேண்டும். பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை நெல்லை நகர மக்கள் எதிர்கொண்டு வரவேற்ற இடம் பாண்டியபுரம் எனவும் அவன் தேவியாகிய மங்கையர்க்கரசியை மகளிர் எதிர் கொண்டு வரவேற்ற இடம் திருமங்கை நகர் என்றும் வழங்கப்படுகின்றன.

41. காவற்புரை என்றால் என்ன?

(A) சிறைச்சாலை
(B) காவற்சாலை
(C) காவலர்
(D) அரசர்
(E) விடை தெரியவில்லை

42. கூலம் என்பது எதைக் குறிக்கும்?

(A) பயிறு
(B) அரிசி
(C) தானியம்
(D) பயறு
(E) விடை தெரியவில்லை

43. அணிகலன்களும், பொற்காசுகளும் உருவாக்கும் இடம் எது?

(A) அணிகலன்

(B) பொன்

(C) தட்டச்சன்

(D) அக்கசாலை

(E) விடை தெரியவில்லை

44. பாண்டிய மன்னரை வரவேற்ற இடம் எது?

(A) அயனபுரம்

(B) அரண்மனை

(C) பாண்டியபுரம்

(D) பாண்டியர்

(E) விடை தெரியவில்லை

45. நெல்லை நகரின் மேற்கே உள்ள ஊர் எது?

(A) நெல்லையப்பர்

(B) பேட்டை

(C) காவலர்

(D) நின்றசீர்

(E) விடை தெரியவில்லை

46. ஒருமை பன்மை பிழையற்ற தொடர் எது?

(A) நான் வாங்கிய நூல் இது அல்ல
(B) நான் வாங்கிய நூல் இது அன்று
(C) நான் வாங்கிய நூல்கள் இது அல்ல
(D) நான் வாங்கிய நூல்கள் இவை அன்று
(E) விடை தெரியவில்லை

47. ஒருமை – பன்மை பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக.

(A) பகைவர் நீவீர் அல்லர்
(B) பகைவர் நீவீர் அல்லீர்
(C) பகைவர் நீவீர் அல்லோம்
(D) பகைவர் நீவீர் அல்ல
(E) விடை தெரியவில்லை

48. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) மதலை, நெகிழி, அழுவம், சென்னி, உரவு நீர், கரையும்
(B) அழுவம், உரவு நீர், மதலை, நெகிழி, சென்னி, கரையும்
(C) நெகிழி, அழுவம், உரவு நீர், கரையும், மதலை, சென்னி
(D) அழுவம், உரவு நீர், கரையும், நெகிழி, சென்னி, மதலை
(E) விடை தெரியவில்லை

49. 'கெடுதல்' என்ற தொழிற்பெயர் எவ்வாறு திரியும்?

(A) கெடு, கேடு
(B) கொடு, கோடு
(C) கேடு, கோடு
(D) கெடு, கொடு
(E) விடை தெரியவில்லை

50. விகுதி பெறாத தொழிற்பெயர்

(A) கூத்து
(B) வேக்காடு
(C) கடவுள்
(D) ஏற்றுமதி
(E) விடை தெரியவில்லை

51. பகுதி I உடன் பகுதி II ஐப் பொருத்துக.

| | பகுதி I | | பகுதி II |
|---|---|---|---|
| (a) | குறிஞ்சி | 1. | வருணன் |
| (b) | முல்லை | 2. | முருகன் |
| (c) | மருதம் | 3. | திருமால் |
| (d) | நெய்தல் | 4. | இந்திரன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

52. எடுத்துக்காட்டினை பொருத்துக.

மரம், காடு – மா, கருவேலங்காடு

(A) இடுகுறிப் பெயர் – காரணப்பெயர்

(B) இடுகுறிப் பெயர் – இடுகுறி சிறப்புப்பெயர்

(C) பண்புப் பெயர் – இடுகுறிப்பெயர்

(D) இடுகுறிப்பெயர் – சினைப்பெயர்

(E) விடை தெரியவில்லை

53. சொல் – பொருள் பொருத்துக.

(A) காலை – பணி

(B) தால் – நாக்கு

(C) தழை – கட்டு

(D) வேலை – வேளை

(E) விடை தெரியவில்லை

54. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) வலதுபக்கச் சுவரில் எழுதாதே

(B) இடப் பக்கச் சுவரில் எழுதாதே

(C) வலப் பக்கச் சுவற்றில் எழுதாதே

(D) இடது பக்கச் சுவற்றில் எழுதாதே

(E) விடை தெரியவில்லை

55. சந்திப் பிழையற்ற தொடரைக் குறிப்பிடுக.

(A) கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

(B) கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

(C) கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

(D) கயிறுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

(E) விடை தெரியவில்லை

56. சரியான நிறுத்தற் குறிகளைக் கண்டறிக.

(A) தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.

(B) "தில்லான்" இந்திய தேசிய இராணுவத்தின், இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்.

(C) தில்லான், இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும், ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்.

(D) தில்லான், 'இந்திய தேசிய இராணுவத்தின், இதயமும், ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்'.

(E) விடை தெரியவில்லை

57. சரியான நிறுத்தற்குறியிட்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(A) மனிதா, மனிதா ! அழைப்பது கேட்கிறதா?
எங்கு பார்க்கிறாய் ; யாரைத் தேடுகிறாய்?

(B) மனிதா மனிதா அழைப்பது கேட்கிறதா ;
எங்கு பார்க்கிறாய் ; யாரைத் தேடுகிறாய்?

(C) மனிதா ! மனிதா ! அழைப்பது கேட்கிறதா?
எங்கு பார்க்கிறாய்? யாரைத் தேடுகிறாய்?

(D) மனிதா, மனிதா, அழைப்பது கேட்கிறதா?
எங்கு பார்க்கிறாய்? யாரைத் தேடுகிறாய்?

(E) விடை தெரியவில்லை

58. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.

தவறான ஊர்ப் பெயரின் மரூஉவை எழுதுக.

(A) கோவை – கோயம்புத்தூர்

(B) திருச்சி – திருச்சிராப்பள்ளி

(C) நெல்லை – நெய்வேலி

(D) புதுவை – புதுச்சேரி

(E) விடை தெரியவில்லை

59. 'சனி நீராடு'

எப்புலவரின் வாக்கு?

(A) பாரதியின் வாக்கு

(B) பாரதிதாசனின் வாக்கு

(C) ஔவையின் வாக்கு

(D) கம்பரின் வாக்கு

(E) விடை தெரியவில்லை

60. சரியான எண்ணடையைக் கண்டறிக.

(A) ஒரு இரவு

(B) ஒன்று இரவு

(C) ஒன் இரவு

(D) ஓர் இரவு

(E) விடை தெரியவில்லை

61. 'நன்மொழி' - என்பதன் எதிர்ச்சொல் எழுதுக.

(A) நல்ல மொழி

(B) தீமொழி

(C) நற்சொல்

(D) நன்மை

(E) விடை தெரியவில்லை

62. குறில் நெடில் மாற்றம் அறிந்து பொருள் வேறுபாடு சரியானதைக் கண்டறிக.

அழி – ஆழி

(A) அழித்தல் – வீரம்

(B) வயல் – கடல்

(C) நெருப்பு – பறவை

(D) அழித்தல் – கடல்

(E) விடை தெரியவில்லை

63. மதி – இரு பொருள் கண்டறிக.

(A) நிம்மதி, மதித்தல்

(B) நிலா, அறிவு

(C) சந்திரன், அழகு

(D) இடை, கடை

(E) விடை தெரியவில்லை

64. இரு பொருள் தருக.

கால்

(A) கால் பங்கு பிரித்துக்கொடு, ஈரம் பார்த்து கால் வை

(B) கால் வலிக்கிறது, காலில் செருப்பு அணி

(C) கால் முறிந்தது, காலில் புண் உள்ளது

(D) கடல் அலை, கால் பாகம் உண்டு

(E) விடை தெரியவில்லை

65. இச்செயலைச் செய்தது மங்கையா? மடந்தையா? என்று வினவுவது

(A) கொடை வினா

(B) ஏவல் வினா

(C) ஐய வினா

(D) அறியா வினா

(E) விடை தெரியவில்லை

66. பல தொழில்களால் இயங்கினாலும் உலகம்
ஏருக்குப் பின்னாலேயே போகும்! வருந்தி
உழைத்தாலும் உழவுத் தொழிலே சிறந்தது.
– சரியான இணைப்புச்சொல்லை எழுது.

(A) எனவே

(B) அதனால்

(C) ஆகையால்

(D) அதுபோல

(E) விடை தெரியவில்லை

67. கீழ்க்கண்டவற்றில் சரியான இணைப்புச் சொல்லை எழுதுக.
நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும் ————————
துன்பப்பட நேரிடும்.

(A) ஏனெனில்

(B) இல்லையென்றால்

(C) அதனால்

(D) ஆகையால்

(E) விடை தெரியவில்லை

68. பிரித்தெழுதுதல்

'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ————————.

(A) இரண்டு + டல்ல

(B) இரண் + அல்ல

(C) இரண்டு + இல்ல

(D) இரண்டு + அல்ல

(E) விடை தெரியவில்லை

69. பிரித்து எழுதுக:

'பெருங்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) பெரு + கடல்

(B) பெருமை + கடல்

(C) பெரிய + கடல்

(D) பெருங் + கடல்

(E) விடை தெரியவில்லை

70. இரு பொருள் கொண்ட ஒரு சொல்.

அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை ———————— பழகும்.
அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்கு மொழி ————————.

(A) வழக்கு

(B) அழகு

(C) நடை

(D) நயம்

(E) விடை தெரியவில்லை

71. அடைப்புக்குறிக்குள் உள்ள சொல்லை பொருத்தமான இடத்தில் எழுது (அவர்)

(A) என் வீடு ———————— உள்ளது.

(B) தம்பி ———————— வா.

(C) நீர் ———————— தேங்கி இருக்கிறது.

(D) யார் ———————— தெரியுமா?

(E) விடை தெரியவில்லை

72. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (வேற்றுமை)

(A) ———————— இறக்கமும் மலைக்கு அழகு

(B) அழுகையும் ———————— வாழ்வில் இயல்பு

(C) ———————— முதுமையும் யாவர்க்கும் உண்டு

(D) ஒற்றுமை கண்டால் ———————— நீங்கும்

(E) விடை தெரியவில்லை

73. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (உணவு)

(A) உறவுக்கு ———————— கொடு

(B) பசித்தவனுக்கு ———————— கொடு

(C) உழைப்புக்கு ———————— கொடு

(D) உரிமைக்கு ———————— கொடு

(E) விடை தெரியவில்லை

74. குயிலுக்குக் கூடு கட்டத்தெரியாது
காக்கையின் கூட்டில் முட்டையிடும்.
சரியான இணைப்புச் சொல் எது ?

(A) அதனால்

(B) ஆகையால்

(C) எனவே

(D) ஏனெனில்

(E) விடை தெரியவில்லை

75. கல் – கூட்டுப் பெயர்.
சரியான எண்ணடையைத் தேர்வு செய்க.

(A) கல்லுக்கூட்டம்

(B) கற்குலை

(C) கற்கட்டு

(D) கற்குவியல்

(E) விடை தெரியவில்லை

76. தகுந்த சொல்லைத் தேர்ந்தெடு.

ஆராயும் அறிவு உடையவர்கள் —————— சொற்களைப் பேசமாட்டார்.

(A) உயர்வான

(B) விலையற்ற

(C) பயன்தராத

(D) பயன் உடைய

(E) விடை தெரியவில்லை

77. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

சரியான இணையைத் தேர்ந்தெடு

(A) தாள் – முடி

(B) பனி – குளிர்

(C) அரம் – வீரம்

(D) கரம் – கால்

(E) விடை தெரியவில்லை

78. தவறான இணையைத் தேர்க.

(A) தொண்டு – Charity

(B) தத்துவம் – Philosophy

(C) பகுத்தறிவு – Integrity

(D) சீர்திருத்தம் – Reform

(E) விடை தெரியவில்லை

79. கலைச் சொற்களை அறிதல்.

சரியான இணையைத் தேர்க.

(A) ஆன்லைன் ஷாப்பிங் – மின்னணு வணிகம்

(B) கிரெடிட் கார்டு – காசோலை

(C) ஈ காமர்ஸ் – மின்னணு மயம்

(D) டிமாண்ட் டிராப்ட் – வரைவோலை

(E) விடை தெரியவில்லை

80. 'Epigraph' – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) சித்திர எழுத்து
(B) கல்வெட்டு
(C) செப்பேடு
(D) ஒப்பெழுத்து
(E) விடை தெரியவில்லை

81. கூற்று, காரணம் – சரியா? தவறா?

கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு.

காரணம் : பண்டைத்தமிழ் மன்னர்களின் ஆட்சி, வீரம், கொடை, கல்வி முதலியவற்றை அறியலாம்.

(A) கூற்று சரி : காரணம் சரி
(B) கூற்று தவறு : காரணம் தவறு
(C) கூற்று சரி : காரணம் தவறு
(D) கூற்று தவறு : காரணம் சரி
(E) விடை தெரியவில்லை

82. கூற்று – காரணம் – சரியா? தவறா?

கூற்று : திருமூலர் திருமந்திரம் எழுதினார்

காரணம் : பதினெண் சித்தர்களுள் ஒருவர் திருமூலர்

(A) கூற்று தவறு : காரணம் தவறு
(B) கூற்று சரி : காரணம் தவறு
(C) கூற்று தவறு : காரணம் சரி
(D) கூற்று சரி : காரணம் சரி
(E) விடை தெரியவில்லை

83. குறில் நெடில் மாற்றம்

தவறான இணையைக் கண்டறிக

(A) கலம் காலம்
(B) சுழல் சூழல்
(C) புகழ் திகழ்
(D) வளம் வாழ்வு
(E) விடை தெரியவில்லை

84. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்

கல்லில் நார் உரித்தல்

(A) நீண்டகாலமாக இருப்பது

(B) ஆராய்ந்து பாராமல்

(C) இயலாத செயல்

(D) விரைந்து வெளியேறுதல்

(E) விடை தெரியவில்லை

85. சொற்களை ஒழுங்குபடுத்துக.

"வரின் ஆயினும் அல்லில் விருந்து உவக்கும்"

(A) ஆயினும் உவக்கும் விருந்துவரின் அல்லில்

(B) விருந்துவரின் உவக்கும் அல்லில் ஆயினும்

(C) அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்

(D) உவக்கும் விருந்துவரின் ஆயினும் அல்லில்

(E) விடை தெரியவில்லை

86. ஆங்கிலச் சொல்லுக்கான நேரான தமிழ்ச்சொல் அறிக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Vowel | 1. | ஒரு மொழி |
| (b) | Consonant | 2. | ஒப்பெழுத்து |
| (c) | Homograph | 3. | உயிரெழுத்து |
| (d) | Monolingual | 4. | மெய்யெழுத்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

87. Space Technology என்ற ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ச்சொல் தருக.

(A) விண்வெளி நுட்பம்

(B) உயிரித் தொழில்நுட்பம்

(C) விண்வெளித் தொழில் நுட்பம்

(D) மீநுண் தொழில் நுட்பம்

(E) விடை தெரியவில்லை

88. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் அறிக

| | | | |
|---|---|---|---|
| (a) | Crop | 1. | உறை |
| (b) | Folder | 2. | உலாவி |
| (c) | Cursor | 3. | செதுக்கி |
| (d) | Browser | 4. | சுட்டி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

89. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக

(A) பனை வடலி

(B) தென்னங்கன்று

(C) வாழை நாற்று

(D) விளாங்கூழ்

(E) விடை தெரியவில்லை

90. வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக

சென்றனர்

(A) சென்று

(B) செல்

(C) சென்ற

(D) செல்ல

(E) விடை தெரியவில்லை

91. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்

நடந்தாள்

(A) நட

(B) நடக்கிறாள்

(C) நடப்பாள்

(D) நடக்குவாள்

(E) விடை தெரியவில்லை

92. ஒருபொருள் தரும் பல சொற்கள்

"வயல்"

(A) பகல், பழனம்
(B) கழனி, பழனம்
(C) செய், நெல்
(D) நீர்நிலை, கேணி
(E) விடை தெரியவில்லை

93. சேர்த்து எழுதுக :

எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) எழுத்து ஆணி
(B) எழுத்தாணி
(C) எழுத்து தாணி
(D) எழுதாணி
(E) விடை தெரியவில்லை

94. சரியான வினாவைத் தேர்ந்தெடு

"இங்கு நகரப் பேருந்து நிற்குமா"? என்று வழிப்போக்கர் கேட்டது

(A) ஐயவினா
(B) அறியா வினா
(C) அறிவினா
(D) கொளல் வினா
(E) விடை தெரியவில்லை

95. சரியான வினாச்சொல் எது?

நெல்லையப்பர் கோவில் ———————— உள்ளது?

(A) எப்படி
(B) எத்தனை
(C) எங்கு
(D) என்ன
(E) விடை தெரியவில்லை

96. மூன்று காலங்களையும் குறிக்கும் சொல் எது?

(A) நடந்தாள், நடக்கிறாள், நடப்பாள்
(B) காண், காண்பாள், கண்டாள்
(C) ஆடினாள், ஆடு, ஆடுவாள்
(D) பார்த்தல், பார்ப்பாள், பார்த்தாள்
(E) விடை தெரியவில்லை

97. தவறான உவமை இணையைத் தேர்ந்தெடுக்க

(A) பசுமரத்தாணிபோல – எளிதில் மனத்தில் பதிதல்

(B) மடைதிறந்த வெள்ளம்போல – தடையின்று

(C) கீரியும் பாம்பும் போல – ஒற்றுமை

(D) விழலுக்கு இறைத்த நீர்போல – பயனற்றசெயல்

(E) விடை தெரியவில்லை

98. எதிர்சொல்லை எடுத்தெழுது

எத்தனிக்கும்

(A) முயலாமை

(B) அறியாமை

(C) நீங்காமை

(D) தளராமை

(E) விடை தெரியவில்லை

99. "இளமை" – என்பதன் எதிர்ச்சொல் எழுதுக.

(A) புதுமை

(B) முதுமை

(C) தனிமை

(D) இனிமை

(E) விடை தெரியவில்லை

100. கூட்டப் பெயர் :

'புள்'

சரியான எண்ணடையைத் தேர்வு செய்க.

(A) புள் கூட்டம்

(B) புள் திரள்

(C) புட் குழாம்

(D) புள் குவியல்

(E) விடை தெரியவில்லை

# பகுதி-ஆ (பொது அறிவு)

## Part-B (General Studies)

வினாக்கள் : 101–200 மொத்த மதிப்பெண்கள் : 150

Questions : 101–200 Total Marks : 150

101. Name the steroid found in yeast.
ஈஸ்டில் காணப்படும் ஸ்டீராய்டின் பெயர் என்ன?

(A) Lanosterol
லானோஸ்டீரால்

(B) Bile acids
பித்த அமிலம்

(C) Ergosterol
எர்கோஸ்டீரால்

(D) Ostreasterol
ஆஸ்டிரியோஸ்டீரால்

(E) Answer not known
விடை தெரியவில்லை

102. The sugar found in insect haemolymph is
பூச்சிகளின் ஹீமோலிம்பில் காணப்படும் சர்க்கரை ———— ஆகும்.

(A) Cellobiose
செல்லோபயோஸ்

(B) Maltose
மால்டோஸ்

(C) Trehalose
டிரக்கலோஸ்

(D) Glucose
குளுக்கோஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

103. The present form of the World was created by

தற்கால உலகம் என்பது ———— ஆல் உருவாக்கப்பட்டுள்ளது.

(A) Evolutionary forces
பரிணாம சக்திகளால்

(B) Inorganic and Organic Materials
கனிம மற்றும் கரிம பொருள்களால்

(C) Almighty
கடவுளால்

(D) Organic evolution
கரிம பரிணாமத்தால்

(E) Answer not known
விடை தெரியவில்லை

104. The fossil of Java-Ape-Man Pithecanthropus erectus was discovered by

ஜாவா குரங்கு மனிதனின் புதைபடிவமான பித்திகேன்தோரோபஸ் எரக்டஸ்யை கண்டுபிடித்தவர்.

(A) Mayr
மாயர்

(B) Simpson
சிம்சன்

(C) L.S.B. Leakey
எல்.எஸ்.பி. லீக்கி

(D) Dubois
டிபாயிஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

105. If 'A' is the mass number of an element, then volume of the nucleus of an atom of this element is proportional to

ஒரு தனிமத்தின் பொருண்மை எண் 'A'. அதன் அணுக்கருவின் பருமன் எந்த விகிதம்?

(A) A

(B) $A^2$

(C) $A^3$

(D) $A^{1/3}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

106. Which of the following particles has same mass as that of the electron?
பின்வரும் துகள்களில் எலக்ட்ரானின் அதே அளவு நிறை கொண்ட துகள் எது?

(A) Proton
புரோட்டான்

(B) Neutron
நியூட்ரான்

(C) Positron
பாசிட்ரான்

(D) Neutrino
நியூட்ரினோ

(E) Answer not known
விடை தெரியவில்லை

107. A laser beam is used for carrying out surgery because it
அறுவை சிகிச்சை செய்ய லேசர் கற்றை பயன்படுத்தப்படுகிறது ஏனெனில் அது

(A) is highly coherent beam
மிகவும் ஓரியல் கற்றையாகும்

(B) is highly directional beam
மிகவும் திசை கற்றை ஆகும்

(C) is sharply focussed
கூர்மையான குவியம் கொண்டது

(D) is highly monochromatic
மிகவும் ஒற்றை நிறமுடையது

(E) Answer not known
விடை தெரியவில்லை

108. Choose a highly selective rodenticide for rats among sodium fluro acetate, alpha naphthyl urea, norbormide and thallium acetate.
சோடியம் ஃப்ளோரோ அசிட்டேட், ஆல்பா நாப்தைல் யூரியா, நார்போர்மைடு மற்றும் தாலியம் அசிட்டேட் ஆகியவற்றுள் கொறித்துண்ணிகளான எலிகளுக்கு மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட கொல்லியை தேர்ந்தெடு.

(A) Sodium fluro acetate
சோடியம் ஃப்ளோரோ அசிடேட்

(B) Alpha naphthyl urea
ஆல்பா நாப்தைல் யூரியா

(C) Norbormide
நார்போர்மைடு

(D) Thallium acetate
தாலியம் அசிட்டேட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

109. The Zoological survey of India has recommended to tag which of these turtles along the Rushikulya river mouth in Ganjam district for studying the migration route of these endangered species

இந்திய விலங்கினம் கணக்கெடுப்பு மையத்தால் கீழ்க்கண்டவற்றுள் எது கஞ்சம் மாவட்டத்தில் உள்ள ருசிகுல்யா நதி வாய் வழியாக வலசைபோகும் அழிந்து வரும் இனங்களை ஆராய குறியீடு செய்யப்பட்டுள்ளது

(A) Indian Black Turtle
இந்திய கருப்பு ஆமை

(B) Green Sea Turtle
பச்சை கடல் ஆமை

(C) Olive Ridleys Turtle
ஆலிவ் ரிட்லி ஆமை

(D) Indian Star Turtle
இந்திய நட்சத்திர ஆமை

(E) Answer not known
விடை தெரியவில்லை

110. Which of the following programme has been launched by Central Government for the cleaning of River Ganga?

கங்கை நதியை சுத்தம் செய்வதற்காக கீழ்கண்ட திட்டங்களில் எது மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ளது?

(A) Ganga Action Plan
கங்கா செயல் திட்டம்

(B) Namami Gangae
நமாமி கங்கே

(C) Gangae Namami Action plan
கங்கே நமாமி செயல்திட்டம்

(D) Ganga Cleaning Mission
கங்கையை சுத்தம் செய்யும் பணி

(E) Answer not known
விடை தெரியவில்லை

111. Knowledge Economy Mission was launched by ———— government on June 4th 2021.

2021 ஜூன் 4ஆம் தேதி அறிவுசார் பொருளாதார மிஷன் எந்த அரசால் நிறுவப்பட்டது?

(A) Madhya Pradesh
மத்திய பிரதேசம்

(B) Tamil Nadu
தமிழ்நாடு

(C) Uttar Pradesh
உத்தர பிரதேசம்

(D) Kerala
கேரளா

(E) Answer not known
விடை தெரியவில்லை

112. Which of the following schemes is introduced by Government of India to ensure old age protection for unorganised workers?

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு முதுமைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பின்வருவனவற்றுள் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம்

(A) Prime Minister's Yuva Yojana
பிரதமரின் யுவா திட்டம்

(B) Prime Minister's Shram Yogi Maan-Dhan Yojana
பிரதமரின் ஸ்ரம் யோகி மன்-தன் திட்டம்

(C) Prime Minister's Vyay Vandana Yojana
பிரதமரின் வய வந்தனா திட்டம்

(D) Prime Minister's Mudra Yojana
பிரதமரின் முத்ரா திட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

113. 'Dholavira' is an ancient ———— city.

தோலாவிரா பழமையான ———— நகரம்.

(A) Harappan
ஹரப்பன்

(B) Mohenjadaro
மொஹஞ்சதாரோ

(C) Keeladi
கீழடி

(D) Lothal
லோதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

114. The Song Vante Mataram was composed in ———— language by Bankim Chandra Chatterji.

வந்தே மாதரம் என்ற பாடல் ———— மொழியில் பங்கிம் சந்திர சட்டர்ஜியால் இயற்றப்பட்டது.

(A) Bengali
வங்காளம்

(B) Hindi
ஹிந்தி

(C) Urdu
உருது

(D) Sanskrit
சமஸ்கிருதம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

115. 'Statue of Equality' is located in the city of

'சமத்துவச் சிலை' அமையப் பெற்ற நகரம்

(A) Orissa
ஒரிசா

(B) Delhi
டில்லி

(C) Hyderabad
ஹைதராபாத்

(D) Gujarat
குஜராத்

(E) Answer not known
விடை தெரியவில்லை

116. Which one of the following is not correct about the Vijaya Nagar Steel Plant?

கீழ்கண்டவற்றுள் எது விஜயநகர் இரும்பு எஃகு ஆலையுடன் பொருந்தாது?

(A) It is located in the Bellary District of Karnataka
இது கர்நாடகாவின் பெல்லாரி மாவட்டத்தில் அமைந்துள்ளது

(B) It obtains coal from Jharia
இதற்கு ஜாரியாவிலிருந்து நிலக்கரி பெறுகிறது

(C) It obtain hydroelectricity from the Tungabhadra project
இதற்கு துங்கபத்ரா நீர்மின் சக்தியிலிருந்து நீர்மின்சக்தி கிடைக்கிறது

(D) It makes use of coal known as Corex process
இங்கு நிலக்கரியானது கோரக்ஸ் முறையில் பயன்படுத்தப்படுகிறது

(E) Answer not known
விடை தெரியவில்லை

117. Match the given animals with their respective species.
கீழே கொடுக்கப்பட்ட விலங்குகளை அவற்றின் சரியான இனங்களுடன் பொருத்துக.

(a) Endangered species
ஆபத்தான இனங்கள்

(b) Vulnerable species
பாதிக்கப்படக்கூடிய இனங்கள்

(c) Rare species
அரிதான இனங்கள்

(d) Extinct species
அழிந்து போன இனங்கள்

1. Wild buffalow
காட்டு எருமை

2. Asiatic cheetah
ஆசிய புலி

3. Crocodile
முதலை

4. Dolphines
டால்ஃபின்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

118. How many biosphere reserves are there in India?
இந்தியாவில் எத்தனை உயிர் கோள காப்பகங்கள் உள்ளன?

(A) 22

(B) 23

(C) 18

(D) 16

(E) Answer not known
விடை தெரியவில்லை

119. In India how many towns and interstate rivers were covered under the National river conservation plan?
இந்தியாவில், தேசிய நதி பாதுகாப்பு திட்டத்தின் கீழ் எத்தனை நகரங்கள் மற்றும் இடைநிலை ஆறுகள் உள்ளடக்கப்பட்டன?

(A) 152 towns and 27 interstate rivers
152 நகரங்கள் மற்றும் 27 இடைநிலை ஆறுகள்

(B) 125 towns and 30 interstate rivers
125 நகரங்கள் மற்றும் 30 இடைநிலை ஆறுகள்

(C) 512 towns and 33 interstate rivers
512 நகரங்கள் மற்றும் 33 இடைநிலை ஆறுகள்

(D) 215 towns and 25 interstate rivers
215 நகரங்கள் மற்றும் 25 இடைநிலை ஆறுகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

120. Geothermal energy is produced in
புவிவெப்ப சக்தி உற்பத்தி செய்யப்படும் இடம்

(A) Silent valley
அமைதி பள்ளத்தாக்கு

(B) Tapti valley
தப்தி பள்ளத்தாக்கு

(C) Puga valley
புகா பள்ளத்தாக்கு

(D) Araka valley
அரக்கா பள்ளத்தாக்கு

(E) Answer not known
விடை தெரியவில்லை

121. Assertion (A) : The Indus traders resided in Mesopotamia.

கூற்று (A) : சிந்து வியாபாரிகள் மெசபடோமியாவில் தங்கினர்

Reason (R) : They took cotton for sale.

காரணம் (R) : பருத்தியை தங்களுடன் கொண்டு சென்றனர்

(A) (A) is right (R) is wrong
(A) சரி (R) தவறு

(B) Both (A) and (R) are right
(A), (R) இரண்டும் சரி

(C) .(A) is wrong (R) is right
(A) தவறு (R) சரி

(D) (A) is right but (R) is not the correct explanation of (A)
(A) சரி ஆனால் (R) (A) யின் சரியான விளக்கமல்ல

(E) Answer not known
விடை தெரியவில்லை

122. The greatest of Indo-Islamic poets lived during the reign of seven monarchs, and associated in the royal court of Alauddin for a long period. Who was he?

இந்தோ–இஸ்லாமிய கவிஞர்களில் மிகப்பெரியவர். ஏழு மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். மேலும் அலாவுதீன் அரச அவையில் நீண்ட காலம் தொடர்பு உடையவர். அவர் யார்?

(A) Amir Khusrau
அமிர் குஸ்ரு

(B) Barani
பரணி

(C) Kabir
கபீர்

(D) Hanifa Deen.
ஹனிபா டீன்

(E) Answer not known
விடை தெரியவில்லை

123. The term 'Shibars' denotes that

'சிபார்ஸ்' என்ற சொல் எதை குறிக்கின்றது?

(A) Gun boats
துப்பாக்கியுடன் கூடிய படகுகள்

(B) Strong trading vessels
வலிமையான வாணிப கப்பல்கள்

(C) Trading boats
வணிக படகுகள்

(D) Sailors
கப்பல் பணியாளர்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

124. Who lead out the South expedition of Alauddin Khilji against Warangal by way of Bengal in 1303?

1303 ஆம் ஆண்டில் வங்காளத்தின் வழியாக வாரங்கலுக்கு எதிராக அலாவுதின் கில்ஜியின் தெற்கு படையெடுப்பை வழி நடத்தியது யார்?

(A) Bir Dhul
பிர்துல்

(B) Jalaluddin Firuz
ஜலாலுதின் பிருஸ்

(C) Malikafur
மாலிக்கபூர்

(D) Shihabuddin Omar
ஷிகாபுதின் ஓமர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

125. Hindu culture reached its Zenith in India under the reign of the
இந்தியாவில் இந்து பண்பாடு —————— ஆட்சியின் கீழ் உச்சத்தை அடைந்தது.

(A) Mauryas
மௌரியர்கள்

(B) Guptas
குப்தர்கள்

(C) Kushanas
குஷாணர்கள்

(D) Harshas
ஹர்ஷர்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

126. Name the place which is having the world famous for its range of brass items in India.

இந்தியாவில் அதன் பித்தளை பொருட்களின் வரம்பிற்கு உலகப்புகழ் பெற்ற இடத்தின் பெயரைக் குறிப்பிடவும்.

(A) Banaras
பனாரஸ்

(B) Jaipur
ஜெய்ப்பூர்

(C) Moradabad
மொராதாபாத்

(D) Palitana
பலித்தானா

(E) Answer not known
விடை தெரியவில்லை

127. Name the world's oldest university founded in the 5th Century A.D.

கி.பி. 5–ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட உலகின் பழமையான பல்கலைக்கழகத்தின் பெயர் என்ன?

(A) Nalanda
நாலந்தா

(B) Vatabhi
வாதாபி

(C) Takshashila
தட்சசீலம்

(D) Vikramashila
விக்ரமஷிலா

(E) Answer not known
விடை தெரியவில்லை

128. Match List I with List II and select the correct answer from the order given below :

பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிசையிலிருந்து சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.

| List I<br>பட்டியல் I | List II<br>பட்டியல் II |
|---|---|
| (a) Debsa pass<br>டெப்ஸா கணவாய் | 1. Uttarakhand<br>உத்தரகாண்ட் |
| (b) Likhapani pass<br>லிகாபனி கணவாய் | 2. Himachal Pradesh<br>ஹிமாச்சல பிரதேசம் |
| (c) Nathu La pass<br>நாது லா கணவாய் | 3. Arunachal Pradesh<br>அருணாச்சல பிரதேசம் |
| (d) Muling La pass<br>முலிங் லா கணவாய் | 4. Sikkim<br>சிக்கிம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

129. Article 94 of Indian Constitution deals with
இந்திய அரசியலமைப்பு விதி 94 விளக்குவது

(A) Removal of the Speaker and Deputy speaker
சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் நீக்கம்

(B) Removal of Chief judge of Supreme Court
உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி நீக்கம்

(C) Removal of Chief Election Commissioner
தலைமை தேர்தல் ஆணையர் நீக்கம்

(D) Removal of Vice-President
துணைக் குடியரசுத் தலைவர் நீக்கம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

130. Which article of Indian Constitution prohibits traffic in human beings and forced labour?
இந்திய அரசியலமைப்பின் எந்த உறுப்பு மனித கடத்தல் மற்றும் கட்டாய உழைப்பை தடை செய்கிறது?

(A) Article 21
உறுப்பு 21

(B) Article 22
உறுப்பு 22

(C) Article 23
உறுப்பு 23

(D) Article 24
உறுப்பு 24

(E) Answer not known
விடை தெரியவில்லை

131. Which among the following statements on fundamental duties is/are correct?

அடிப்படைக் கடமைகள் பற்றிய கீழ்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி?

(i) They serve as a reminder to the citizens that while enjoying their rights, also to be conscious of duties.

உரிமைகளை அனுபவிக்கின்ற குடிமக்களுக்கு, அவர்களின் கடமைகள் பற்றிய நினைவூட்டலாக இது அமைந்துள்ளது.

(ii) They serve as a warning against the antinationals.

தேச விரோதிகளுக்கு ஓர் எச்சரிக்கையாக இது அமைந்துள்ளது.

(iii) They serve as a source of inspiration for the citizens and promote sense of discipline.

குடிமக்களுக்கு ஊக்கத்தின் ஆதாரமாகவும், அவர்களிடம் ஒழுங்கை மேம்படுத்துமாறும் இது அமைந்துள்ளது.

(iv) They are enforceable by law

இது சட்டத்தின் மூலம் நிலை நாட்டக்கூடியது.

(A) (i), (ii) and (iii) are correct

(i), (ii) மற்றும் (iii) சரியானது

(B) (i), (iii) and (iv) are correct

(i), (iii) மற்றும் (iv) சரியானது

(C) (i) and (ii) are correct

(i) மற்றும் (ii) சரியானது

(D) All are correct

அனைத்தும் சரியானது

(E) Answer not known

விடை தெரியவில்லை

132. Name the Prime Minister of India who initiated the "Look-East Policy"?
"கிழக்கு நோக்கும் கொள்கையை" துவக்கிய இந்திய பிரதமர் யார்?

(A) P.V. Narasimha Rao
P.V. நரசிம்ம ராவ்

(B) Atal Bihari Vajpayee
அடல் பிகாரி வாஜ்பாய்

(C) Manmohan Singh
மன்மோகன் சிங்

(D) I.K. Gujral
I.K. குஜ்ரால்

(E) Answer not known
விடை தெரியவில்லை

133. The power to create or abolish a legislative council is vested with
சட்டமன்ற மேலவையை உருவாக்கவும் மற்றும் நீக்கவுமான அதிகாரம் யாரிடம் உள்ளது?

(A) The Vice president
குடியரசு துணைத் தலைவர்

(B) State Legislature
மாநில சட்டமன்றம்

(C) The President
குடியரசு தலைவர்

(D) The Parliament
நாடாளுமன்றம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

134. The Central Administrative tribunal was setup on
மத்திய நிர்வாக தீர்ப்பாயம் உருவாக்கப்பட்ட ஆண்டு

(A) 1984
(B) 1985
(C) 1986
(D) 1987
(E) Answer not known
விடை தெரியவில்லை

135. Originally which country used the concept of "Public Interest Litigation"?
"பொது நல வழக்கு" முதன் முதலாக எந்த நாட்டில் கொண்டுவரப்பட்டது?

(A) United States of America (USA)
அமெரிக்கா

(B) The United Kingdom
இங்கிலாந்து

(C) Canada
கனடா

(D) Japan
ஜப்பான்

(E) Answer not known
விடை தெரியவில்லை

136. Match the following and choose the correct answer :
கீழே உள்ளவற்றினைப் பொருத்தி சரியான விடை எழுதுக.

| | Act<br>சட்டம் | | Year<br>வருடம் |
|---|---|---|---|
| (a) | Aadhar Act<br>ஆதார் சட்டம் | 1. | 1997<br>1997 |
| (b) | Niti Aayog<br>நிதி ஆயோக் | 2. | 1999<br>1999 |
| (c) | IRDA Act<br>ஐ.ஆர்.டி.ஏ. சட்டம் | 3. | 2015<br>2015 |
| (d) | TRAI Act<br>டிராய் சட்டம் | 4. | 2016<br>2016 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

137. The main objective of the Eleventh Five Year plan was
பதினோறாவது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய நோக்கம்

(A) Growth with stability
நிலைத்தன்மையுடனான வளர்ச்சி

(B) Faster and more inclusive growth
வேகமான மற்றும் மேலும் உள்ளடக்கிய வளர்ச்சி

(C) Removal of poverty
வறுமையை ஒழித்தல்

(D) Attainment of self-reliance
தற்சார்பு அடைதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

138. Match the List I with List II and select the correct answer using the codes given below :

பட்டியல் – I மற்றும் II – ஐ பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையை தேர்வு செய்க.

| List I பட்டியல் – I | | List II பட்டியல் – II |
|---|---|---|
| (a) M.N. Roy எம்.என். ராய் | 1. | Gandhian plan காந்திய திட்டம் |
| (b) Shriman Narayan ஸ்ரீமன் நாராயன் | 2. | Bombay plan பம்பாய் திட்டம் |
| (c) Eight industrialists எட்டு தொழிலதிபர்கள் | 3. | People's plan மக்கள் திட்டம் |

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 |
| (B) | 3 | 1 | 2 |
| (C) | 1 | 3 | 2 |
| (D) | 3 | 2 | 1 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

139. The following one is not a source of the State Tax Revenue?
கீழே காணப்படும் இனங்களில் மாநில அரசின் வரி வருவாய் மூலம் இல்லாதது எது?

(A) Land Revenue
நில வருவாய்

(B) Motor vehicles Tax
மோட்டார் வாகன வரி

(C) Entertainment Tax
பொழுதுபோக்கு வரி

(D) Corporate Tax
வணிக நிறுவன வரி

(E) Answer not known
விடை தெரியவில்லை.

140. Name the following articles of the Indian Constitution authorizes the appointment of Finance Commission?
கீழ்கண்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகளில் நிதிக்குழு எந்த பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டது?

(A) Article 252
பிரிவு 252

(B) Article 268
பிரிவு 268

(C) Article 272
பிரிவு 272

(D) Article 280
பிரிவு 280

(E) Answer not known
விடை தெரியவில்லை

141. Match the List I with List II and select the correct answer using the codes given below :

பட்டியல் I மற்றும் பட்டியல் II-ஐ பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையை தேர்வு செய்க.

| List I<br>பட்டியல் I | List II<br>பட்டியல் II |
|---|---|
| (a) NABARD<br>NABARD | 1. Industrial Finance or (Loan)<br>தொழில் நிதி அல்லது (கடன்) |
| (b) HDFC<br>HDFC | 2. Micro Finance or (Loan)<br>நுண்ணிய நிதி அல்லது (கடன்) |
| (c) IDBI<br>IDBI | 3. Housing Finance or (Loan)<br>வீட்டு நிதி அல்லது (கடன்) |
| (d) SHG<br>SHG | 4. Agriculture Finance or (Loan)<br>விவசாய நிதி அல்லது (கடன்) |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

142. The date and year of launched the programme : 'Make in India'.

"இந்தியாவில் செய்யுங்கள்" திட்டம் தொடங்கப்பட்ட நாள் மற்றும் ஆண்டு

(A) March 25, 2012
மார்ச் 25, 2012

(B) April 20, 2014
ஏப்ரல் 20, 2014

(C) September 25, 2014
செப்டம்பர் 25, 2014

(D) December 12, 2016
டிசம்பர் 12, 2016

(E) Answer not known
விடை தெரியவில்லை

143. Providing Urban Amenities in Rural Areas (PURA) scheme was launched in 2003 for ———— Rural Development Blocks.

நகர்ப்புறத்தில் உள்ள அடிப்படை வசதிகளை கிராமப்புறத்தில் வழங்குதல் (PURA) – திட்டமானது 2003ல் ———— கிராம வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது.

(A) 2000 Blocks
2000 வட்டாரங்கள்

(B) 3000 Blocks
3000 வட்டாரங்கள்

(C) 5000 Blocks
5000 வட்டாரங்கள்

(D) 6000 Blocks
6000 வட்டாரங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

144. Which one of the following is correct?
பின்வருவனவற்றுள் எது சரி?

Assertion [A] : The first uprising against the alien rule broke out in Bengal in 1770.

கூற்று [A] : அந்நிய ஆட்சிக்கு எதிராக நடந்த முதல் கிளர்ச்சி 1770ல் வங்காளத்தில் வெடித்தது.

Reason [R] : The main cause was destructive famine and the exploitation of the farmers.

காரணம் [R] : இதற்கான முக்கிய காரணம் அழிவை ஏற்படுத்திய பஞ்சமும் மற்றும் விவசாயிகள் சுரண்டப்பட்டதும் ஆகும்.

(A) Both [A] and [R] are true and [R] is not the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி, மற்றும், [R] [A] க்கான சரியான விளக்கம் அல்ல

(B) [A] is true, but [R] is false
[A] சரி, ஆனால் [R] தவறு

(C) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி, மற்றும் [R], [A] க்கான சரியான விளக்கம்

(D) [A] is false, but [R] is true
[A] தவறு, ஆனால் [R] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

145. Assertion [A] : Dadabai Naoroji organised the East India Association in London.

கூற்று [A] : தாதாபாய் நௌரோஜி கிழக்கிந்தியக் கழகத்தை லண்டனில் உருவாக்கினார்.

Reason [R] : He wanted to influence the British Public opinion.

காரணம் [R] : பிரிட்டிஷ் பொதுமக்கள் கருத்தின் மீது செல்வாக்கு ஏற்படுத்த விரும்பினார்.

(A) [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி, மற்றும் [R], [A] க்கான சரியான விளக்கம்

(B) [A] is true, but [R] is false
[A] சரி, ஆனால் [R] தவறு

(C) [A] is false, but [R] is true
[A] தவறு, ஆனால் [R] சரி

(D) [A] and [R] are true and [R] is not the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி, மற்றும் [R], [A] க்கான சரியான விளக்கமல்ல

(E) Answer not known
விடை தெரியவில்லை

146. Choose the right matches :
சரியானவற்றை பொருத்துக :

1. The prophet of Indian nationalism – Raja Ram Mohan Roy
இந்திய தேசியத்தின் தூதுவர் – இராஜா ராம் மோகன்ராய்

2. To rouse pride of people in their rich heritage gave a call 'back to vedas' – Swami Vivekananda
மக்களின் சிறந்த பாரம்பரியத்தை தெரிந்து கொண்டு எழுச்சி பெற 'வேதங்களை நோக்கி செல்லும்' – சுவாமி விவேகானந்தா

3. R.G. Pradhan called him the father of Indian Nationalism – Swami Dayanand Saraswathi
R.G. பிரதான் இவரை இந்திய 'தேசியத்தின் தந்தை' என்றழைத்தார் – சுவாமி தயானந்த சரஸ்வதி

4. 'Swaraj is my birth right' is a statement of – Bal Gangadhar Tilak
'சுயராஜியம் எனது பிறப்புரிமை' என்று கூறியவர் – பால கங்காதர் திலகர்

(A) 1 and 2 are correct
1 மற்றும் 2 சரி

(B) 2 and 3 are correct
2 மற்றும் 3 சரி

(C) 3 and 4 are correct
3 மற்றும் 4 சரி

(D) 1 and 4 are correct
1 மற்றும் 4 சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

147. Who said the following words?
பின்வரும் வார்த்தைகளைக் கூறியவர் யார்?

"Melt the iron and make steel, forge machines"
"இரும்பை உருக்கி, எஃகு உருவாக்கி, உறுதியான இயந்திரங்களை உருவாக்கு"

(A) V.O. Chidambaranar
வ.உ. சிதம்பரனார்

(B) Bhagat Singh
பகத் சிங்

(C) Subramania Bharathi
சுப்ரமண்ய பாரதி

(D) Subash Chandra Bose
சுபாஷ் சந்திர போஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

148. Who said the following words?
பின்வரும் கூற்றினை கூறியவர் யார்?

"If freedom could be attained without violence it was well and good, if not, the nation has the right to expel the foreigner by force".
"வன்முறையில்லாமல் விடுதலை அடைந்துவிட்டால் மிக நல்லது ; இல்லை என்றால் தேசத்திற்கு படையை வைத்து அந்நியரை விரட்டும் உரிமை உண்டு"

(A) Bhagat Singh
பகத்சிங்

(B) Maulana Abul Kalam Azad
மௌலானா அபுல் கலாம் ஆசாத்

(C) Subash Chandra Bose
சுபாஷ் சந்திர போஸ்

(D) Gurdial Singh Dhillon
குர்தியால் சிங் திலான்

(E) Answer not known
விடை தெரியவில்லை

149. The technique of Satyagraha included various methods.
சத்தியாகிரக உத்தி பல்வேறு முறைகளை உள்ளடக்கியது.

Which of the following was/were not included by Gandhi?
பின்வருவனவற்றுள் எது/எவை காந்தியால் சேர்க்கப்படவில்லை?

(i) Fasting
உண்ணாவிரதம்

(ii) Hartals
வேலை நிறுத்தம்

(iii) Scroched earth policy
எரிந்த பூமி கொள்கை

(iv) Underground activities
நிலத்தடி நடவடிக்கைகள்

(A) (i) and (iv)
(i) மற்றும் (iv)

(B) (iii) and (iv)
(iii) மற்றும் (iv)

(C) (i) and (iii)
(i) மற்றும் (iii)

(D) (ii) and (iv)
(ii) மற்றும் (iv)

(E) Answer not known
விடை தெரியவில்லை

150. Which of the following statement/s is/are true?
பின்வருவனவற்றுள் எக் கருத்து/கள் சரி?

| | | |
|---|---|---|
| Assertion [A] | : | The Aligarh Movement became communal under Sir Syed Ahmad Khan's guidance, which helped in the creation of Pakistan. |
| கூற்று [A] | : | அலிகார் இயக்கம் சர் சையத் அகமத் கான் தலைமையின் கீழ் வகுப்புவாதத்தை உருவாக்கியது. அது பாகிஸ்தான் உருவாவதற்கு உறுதுணை செய்தது. |
| Reason [R] | : | Sir Syed Ahmad Khan depended on the British for his activities and the British brought in Muslim Communalism. |
| காரணம் [R] | : | சர் சையத் அகமத் கான் தன்னுடைய நடவடிக்கைகளுக்கு பிரிட்டிஷாரை சார்ந்து இருந்தார். இது பிரிட்டிஷார் முஸ்லீம் வகுப்புவாதம் கொண்டு வர வைத்தது. |

(A) [A] and [R] are true, [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி, [R], [A] க்கான சரியான விளக்கம்

(B) [A] is true, [R] is false
[A] சரி [R] தவறு

(C) [A] and [R] are true, [R] is not the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி, [R], [A] க்கான சரியான விளக்கமல்ல

(D) [A] is false, [R] is true
[A] தவறு [R] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

151. One among the following inscriptions speaks about the village administrations of the Pallavas.
கீழ்வருவனவற்றுள் ஒன்று பல்லவர்களது கிராம நிர்வாகத்தைக் கூறும் கல்வெட்டு ஆகும்.

(A) Manur Inscription
மானூர் கல்வெட்டு

(B) Thiruchirapalli Inscription
திருச்சிராப்பள்ளி கல்வெட்டு

(C) Kalugumalai Inscription
கழுகுமலை கல்வெட்டு

(D) Ervadi Inscription
ஏர்வாடி கல்வெட்டு

(E) Answer not known
விடை தெரியவில்லை

152. Assertion [A] : The trade contacts of the Tamils with the Roman Empire.
கூற்று [A] : தமிழர்கள் ரோமானியர்களுடன் வாணிபத்தொடர்பு கொண்டிருந்தனர்.

Reason [R] : The Roman Pottery and gold coins unearthed in the Arikkamedu excavation.
காரணம் [R] : ரோமன் நாட்டு பானை ஓடுகளும் தங்க நாணயங்களும் அரிக்கமேட்டில் நடந்த அகழ்வாய்வில் கிடைத்துள்ளன.

(A) [A] and [R] are true, and [R] is correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கமாகும்

(B) [A] is true, but [R] is false
[A] சரி ஆனால் [R] தவறு

(C) [A] and [R] are false
[A] மற்றும் [R] இரண்டும் தவறு

(D) [A] is false but [R] is true
[A] தவறு ஆனால் [R] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

153. Match the following and select the correct answer :
கீழ்கண்டவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்க

| Poets புலவர்கள் | | Region பகுதிகள் |
|---|---|---|
| (a) Marudhanar மருதனார் | 1. | Orakadam (Chengai) ஓரகடம் (செங்கை) |
| (b) Vanganar வங்கனார் | 2. | Edaikadu (Kumari) இடைக்காடு (குமரி) |
| (c) Kadanar காடனார் | 3. | Alangudi (Pudukottai) ஆலங்குடி (புதுக்கோட்டை) |
| (d) Kandarathanar கந்தரத்தனார் | 4. | Kurungudi (Nellai) குருங்குடி (நெல்லை) |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

154. Match List I with List II and select the correct answer :
வரிசை I ஐ வரிசை II உடன் பொருத்தி விடையை காண்க.

| List I (Works) வரிசை I (படைப்புகள்) | | List II (Authors) வரிசை II (ஆசிரியர்கள்) |
|---|---|---|
| (a) Periyapuranam பெரியபுராணம் | 1. | Avvaiyar ஔவையார் |
| (b) Konrai Venthan கொன்றை வேந்தன் | 2. | Jayamkondar ஜெயங்கொண்டார் |
| (c) Kalingathuparani கலிங்கத்துப்பரணி | 3. | Gangadevi கங்காதேவி |
| (d) Madura Vijayam மதுராவிஜயம் | 4. | Sekkilar சேக்கிழார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

155. Which one of the following work is not related to Bharathidasan?
கீழ்க்கண்ட கூற்றுகளில் பாரதிதாசனிடம் தொடர்பில்லாத நூல் எது?

(A) Pandian Parisu
பாண்டியன் பரிசு

(B) Azhakin Sirippu
அழகின் சிரிப்பு

(C) Malarum Malaiyum
மலரும் மாலையும்

(D) Irundaveedu
இருண்ட வீடு

(E) Answer not known
விடை தெரியவில்லை

156. Assertion [A] : Thirukkural is influence on our every day life

கூற்று [A] : திருக்குறள் மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

Reason [R] : Through it, Human beings can follow the principles of non-violence, castelessness secularism and Brotherhood.

காரணம் [R] : மனிதர்கள் திருக்குறளின் மூலப்பொருளான அகிம்சை, மதச்சார்பின்மை, சகோதரத்துவம் ஆகியவற்றை பின்பற்றுகின்றனர்.

(A) [A] is true but [R] is wrong
[A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] is wrong but [R] is true
[A] தவறு ஆனால் [R] சரி

(C) Both [A] and [R] are wrong
[A] மற்றும் [R] இரண்டும் தவறு

(D) Both [A] and [R] are true and [R] is correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி மேலும் [R], [A] விற்கான சரியான விளக்கமாகும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

157. "......are the eyes of all human beings".

In the above Thirukkural, one among the below are identified by Thiruvalluvar as the eyes of all human beings.

"......யிவ்விரண்டும் கண்ணெணப வாழும் உயிர்க்கு".

மேற்காணும் திருக்குறளில் இந்த இரண்டை திருவள்ளுவர் கண்களுக்கு ஒப்பாகக் கூறுகிறார்.

(A) Virtue and wealth
அறமும் பொருளும்

(B) Impartiality and self control
நடுவுநிலைமையும் அடக்கமுடைமையும்

(C) Wealth and love
பொருளும் இன்பமும்

(D) Numbers and letters
எண்ணும் எழுத்தும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

158. (i) "What is called Truth of True word..."

(ii) "External cleanliness can be had by use of ....."

Considering both the above Thirukkurals together, which one of the following would be the most important outcome?

(i) "பொய்மையும் வாய்மை யிடத்த....."

(ii) "புறந்தூய்மை நீராலமையு மகந்தூய்மை ....."

இவ்விரண்டு குறள்களையும் ஒரு சேர மனதில் கொண்டு கீழ்க்கண்ட எந்த விளைவு மிகுந்த முக்கியத்துவம் உள்ளதாகக் கருதுவீர்?

(A) falsehood
பொய்மை

(B) truthfulness
வாய்மை

(C) external cleanliness
புறந்தூய்மை

(D) blameless good
புரை தீர்ந்த நன்மை

(E) Answer not known
விடை தெரியவில்லை

159. Which of the following European wars is associated with first Carnatic war?
முதல் கர்நாடகப் போரின் போது ஐரோப்பாவில் நடந்த போர் எது?

(A) The seven years war
ஏழாண்டுப்போர்

(B) The Austro-Prussian war
ஆஸ்திரிய-பிரஸ்யப்போர்

(C) The war of Roses
ரோஜாப்பூ போர்

(D) The war of the Austrian succession
ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

160. Arrange the following in chronological order
கீழ்க்கண்டவற்றை கால வரிசைப்படுத்தி விடையை தேர்ந்தெடு :

1. Vellore Mutiny
வேலூர் கலகம்

2. Executed the hanging of Kattabomman
கட்டபொம்மனை தூக்கிலிடுதல்

3. Palani conspiracy
பழனி சதிதிட்டம்

4. Treaty of Pondichery
பாண்டிச்சேரி உடன்படிக்கை

(A) 1, 2, 3, 4
(B) 4, 3, 2, 1
(C) 2, 3, 4, 1
(D) 4, 2, 3, 1
(E) Answer not known
விடை தெரியவில்லை

161. Name the person who presided over the Nineth conference of the Madras Constituency of the All India Women's conference of the year 1934.

1934ம் ஆண்டு மெட்ராஸ் தொகுதியில் நடைபெற்ற ஒன்பதாவது பெண்கள் மாநாட்டுக்கு தலைமை தாங்கிய பெண்மணியின் பெயரைக் குறிப்பிடுக.

(A) Dr. Muthulakshmi Reddy
டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி

(B) Mrs. Margaret Cousins
திருமதி. மார்க்கெரட் கசின்ஸ்

(C) Begum Shareejah Hamid Ali
பேகம் ஷரிஜா ஹமித் அலி

(D) Mrs. Annie Besant
திருமதி. அன்னிபெசன்ட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

162. Which one of the following statements is not true?
கீழ்கண்டவற்றுள் எது உண்மையான கூற்று அல்ல?

(A) Justice party won 63 out of 98 elective seats in Legislative Council
சட்ட மேலவையில் நீதிக்கட்சி 98 க்கு 63 தேர்தல் இடங்களை வென்றது

(B) A. Subburayan became the first Chief Minister of Madras Presidency
சென்னை மாகாணத்தில் A. சுப்புராயன் முதல் முதலமைச்சராக ஆனார்

(C) The election was held based on 1919 Act
1919–ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடைபெற்றது

(D) Indian National Congress was totally defeated by Justice Party in 1920 election
1920–ஆம் ஆண்டுத் தேர்தலில் நீதிக்கட்சி காங்கிரஸ் கட்சியை முழுமையாக தோற்கடித்தது

(E) Answer not known
விடை தெரியவில்லை

163. What was the main objective of the Justice Party?
நீதிக்கட்சியின் முக்கியமான நோக்கம் எது?

(A) To fight against the Muslim League
முஸ்லீம் லீக்கிற்கு எதிராகப் போராடுதல்

(B) To secure greater and due representation for Non Brahmins in Government Services
அரசுப் பணிகளில் பிராமணர் அல்லாதவர்களை பங்கேற்கச் செய்தல்

(C) To free the Peasants from the tyanny of Zamindars
ஜமின்தார்களின் சர்வாதிகாரத்திலிருந்து விவசாயிகளை காப்பாற்றுதல்

(D) To discuss the public questions
பொதுப் பிரச்சனை பற்றி விவாதி

(E) Answer not known
விடை தெரியவில்லை

164. Assertion (A) : E.V. Ramasamy was one of the great social reformer of the twentieth century in Tamil Nadu.

கூற்று (A) : E.V. இராமசாமி 20–ம் நூற்றாண்டின் சிறந்த சமூக சீர்திருத்தவாதியாவார்.

Reason (R) : He started Self-Respect movement in an attempt safeguard the downtrodden communities.

காரணம் (R) : அவர் சுயமரியாதை இயக்கத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட மக்களின் நலனைக் காக்க பாடுபட்டார்.

(A) Both (A) and (R) are true, and (R) is correct explanation of (A).

(A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.

(B) (A) is true, but (R) is false.

(A) சரி ஆனால் (R) தவறு.

(C) Both (A) and (R) are false.

(A) மற்றும் (R) இரண்டும் தவறு.

(D) Both (A) and (R) are true.

(A) மற்றும் (R) இரண்டும் சரி.

(E) Answer not known

விடை தெரியவில்லை

165. Which of the following statement is false about E.V. Ramasamy?
கீழ்க்கண்ட கூற்றுகளில் E.V. இராமசாமி பற்றிய தவறான கூற்று எது?

(A) E.V. Ramasamy is known as "Hero of Vaikkam"
E.V. இராமசாமி "வைக்கம் வீரர்" என அழைக்கப்படுகிறார்

(B) He accepted the "Gurukula" system
இவர் "குருகுல" கல்வி முறையை ஆதரித்தார்

(C) He was the founder of Self Respect Movement
இவர் "சுயமரியாதை இயக்கத்தை" தோற்றுவித்தார்

(D) He accept the Self Respect Marriage
இவர் "சுயமரியாதை திருமணத்திற்கு" ஆதரவு தந்தார்

(E) Answer not known
விடை தெரியவில்லை

166. The index which combines social indicators of life expectancy, literacy and income of the people is called
சமுதாய காரணிகளான ஒருவர் உயிர் வாழும் வாய்ப்புள்ள கால அளவு, கல்வி அறிவு மற்றும் வருமானம் ஆகியவைகளை கொண்டு கணிக்கும் குறியீடு

(A) Basic need index
அத்தியாவசிய தேவை குறியீடு

(B) Purchasing power index
வாங்கும் திறன் குறியீடு

(C) Human development index
மனித மேம்பாட்டு குறியீடு

(D) Welfare index
நல குறியீடு

(E) Answer not known
விடை தெரியவில்லை

167. Match the List I with II and select the correct answer using the codes given below :

பட்டியல் – I மற்றும் II ஐ பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையை தேர்வு செய்க :

| | List I<br>பட்டியல் – I | | List II<br>பட்டியல் – II |
|---|---|---|---|
| (a) | Theosophical society<br>தியோசோபிகல் சங்கம் | 1. | 1865<br>1865 |
| (b) | Suddhi Movement<br>சுத்தி இயக்கம் | 2. | 1897<br>1897 |
| (c) | Ramakrishna Mission<br>இராமகிருஷ்ண மிஷன் | 3. | Madam Blavatsky<br>மேடம் பிளவாட்ஸ்கி |
| (d) | Samaraja Suddha Sanmarg<br>சமரச சுத்த சன்மார்க்கம் | 4. | Dayanand Saraswati<br>தயானந்த சரஸ்வதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

168. "Law and rules are only for the people, people are not for the law and the rules" said by

"சட்டமும் விதிகளும் மக்களுக்காக தான், ஆனால் மக்கள் சட்டத்திற்காகவும் விதிகளுக்காகவும் அல்ல" என்று கூறியவர்

(A) Annadurai
அண்ணாதுரை

(B) Periyar E.V. Ramasamy
பெரியார் ஈ.வே. ராமசாமி

(C) Rajaji
ராஜாஜி

(D) Kamaraj
காமராசர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

169. In Tamil Nadu the first ever celebration of May Day was organized in 1923 by

தமிழ்நாட்டில் 1923 ஆம் ஆண்டில் மே தினத்தின் முதல் கொண்டாட்டம் __________ ஏற்பாடு செய்யப்பட்டது.

(A) Singaravelar
சிங்காரவேலர்

(B) E.V.R.
ஈ.வே.ரா.

(C) Kamarajar
காமராஜர்

(D) Rajaji
ராஜாஜி

(E) Answer not known
விடை தெரியவில்லை

170. India Brand Equity Foundation (IBEF) is established by

'இந்திய முத்திரை பலம் அமைப்பு' – யாரால் நிறுவப்பட்டது?

(A) Ministry of Finance
நிதி அமைச்சகம்

(B) Ministry of Commerce and Industry
வாணிபம் மற்றும் தொழில் அமைச்சகம்

(C) Ministry of Information Technology
தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

(D) Ministry of Human Resource Development
மனித வள வளர்ச்சி அமைச்சகம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

171. Match the List I with II and select correct answer using the codes given below :

பட்டியல் – I மற்றும் II ஐ பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையைத் தேர்வு செய்க.

| | List I<br>பட்டியல் I<br>Programme<br>திட்டம் | | List II<br>பட்டியல் II<br>Ministry of<br>அமைச்சகம் |
|---|---|---|---|
| (a) | Swajal Programme<br>சுவாஜல் திட்டம் | (1) | Culture<br>பண்பாட்டு |
| (b) | Samagra Siksha<br>சமக்ரா சிக்ஷா | (2) | Human Resource Development<br>மனிதவள மேம்பாடு |
| (c) | Seva Bhoj Yojana<br>சேவா போஜ் யோஜனா | (3) | Communications<br>தகவல் தொடர்பு |
| (d) | Sampoorna Bima Gram Yojana<br>சம்பூர்ண பீமா கிராம் யோஜனா | (4) | Drinking Water and Sanitation<br>குடிநீர் மற்றும் சுகாதாரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

172. The function of ensuring the availability of drugs and medical facilities at all Government Medical Institutions in Tamil Nadu is under the control of

தமிழ் நாட்டில் உள்ள அனைத்து பொது சுகாதார மையங்களிலும் மருந்துகள் மற்றும் மருத்துவ சேவைகள் கிடைப்பதை உறுதி செய்யும் அமைப்பு

(A) Directorate of Medical Education
மருத்துவ கல்வி இயக்குநரகம்

(B) Directorate of Medical and Rural Health Services
மருத்துவ மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் இயக்குநரகம்

(C) Tamil Nadu Medical Services Corporation Limited (TNMSC)
தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம்

(D) Directorate of Public Health and Preventive Medicine
பொது சுகாதார மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநரகம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

173. Kodiveri Dam is constructed across

'கொடிவேரி அணை' எந்த நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது?

(A) Noyal River
நொய்யல் ஆறு

(B) Bhavani River
பவானி ஆறு

(C) Cauvery River
காவிரி ஆறு

(D) Thamirabarani River
தாமிரபரணி ஆறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

174. In Tamil Nadu Indira Gandhi National Park (Anamalai Tiger Reserve) is located at ———— District/s.

தமிழகத்தில் இந்திரா காந்தி தேசிய பூங்கா (ஆனைமலை புலிகள் காப்பகம்) அமைந்துள்ள மாவட்டம்/மாவட்டங்கள்

(A) Coimbatore and Tiruppur
கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர்

(B) Nilgiris
நீல்கிரிஸ்

(C) Elagiri
ஏலகிரி

(D) Kodaikanal
கொடைக்கானல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

175. Tamil Nadu accounts for ————% of India's software exports in January, 2020.

ஜனவரி 2020-ல் இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழ் நாட்டின் பங்களிப்பு ———— சதவீதம் ஆகும்.

(A) 16.05%

(B) 17.00%

(C) 18.05%

(D) 19.00%

(E) Answer not known
விடை தெரியவில்லை

176. 900 boys and 600 girls appeared in an examination of which 70% of the boys and 85% of the girls passed in the examination. Find the total percentage of students who did not pass.

ஒரு தேர்வை 900 மாணவர்களும் 600 மாணவிகளும் எழுதினார்கள். அந்தத் தேர்வில் 70% மாணவர்களும் 85% மாணவிகளும் தேர்ச்சி பெற்றனர் எனில், தேர்ச்சி பெறாத மாணவ, மாணவிகளின் சதவீதத்தைக் காண்க.

(A) 24% (B) 25%

(C) 28% (D) 30%

(E) Answer not known
விடை தெரியவில்லை

177. Ramu scored 40 out of 50 marks in Tamil, 20 out of 25 marks in English, 30 out of 40 marks, in Science and 68 out of 80 marks in Mathematics. In which subject his percentage of marks is best?

ராமு என்பவர் தமிழ் பாடத்தில் 50க்கு 40 மதிப்பெண்களும், ஆங்கில பாடத்தில் 25க்கு 20 மதிப்பெண்களும், அறிவியல் பாடத்தில் 40க்கு 30 மதிப்பெண்களும், கணிதப் பாடத்தில் 80க்கு 68 மதிப்பெண்களும் பெற்றார் எனில் அவர் எந்தப் பாடத்தில் சிறந்த சதவீதம் பெற்றுள்ளார்?

(A) Tamil
தமிழ்

(B) English
ஆங்கிலம்

(C) Science
அறிவியல்

(D) Mathematics
கணிதம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

178. In a leadership election between two persons A and B, A wins by a margin of 192 votes. If A gets 58% of the total votes, find the total votes polled.

ஒரு தலைமையைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் A மற்றும் B ஆகிய இரு நபர்களில் A ஆனவர் 192 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுகிறார். மொத்த வாக்குகளில் A ஆனவர் 58% ஐப் பெறுகிறார் எனில், பதிவான மொத்த வாக்குகள் எவ்வளவு?

(A) 1000 votes
1000 வாக்குகள்

(B) 1050 votes
1050 வாக்குகள்

(C) 1100 votes
1100 வாக்குகள்

(D) 1200 votes
1200 வாக்குகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

179. The product of 2 two digit numbers is 300 and their H.C.F. is 5 then the two numbers are

இரண்டு ஈரிலக்க எண்களின் பெருக்கற்பலன் 300 மற்றும் அவற்றின் மீ.பொ.கா. 5 எனில் அவ்வெண்கள் யாவை?

(A) 30, 20

(B) 25, 12

(C) 10, 30

(D) 15, 20

(E) Answer not known
விடை தெரியவில்லை

180. A positive integer when divided by 88 gives the remainder 61. When the same number is divided by 11 its remainder is

ஒரு மிகை முழுவை 88 ஆல் வகுக்கும் போது மீதி 61 கிடைக்கிறது. அதே மிகை முழுவை 11ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதி யாது?

(A) 0

(B) 2

(C) 4

(D) 6

(E) Answer not known
விடை தெரியவில்லை

181. Find the LCM of $5x-10$ and $5x^2-20$

மீ.பொ.ம. காண்க : $5x-10$, $5x^2-20$

(A) $5(x-2)$

(B) $5(x+2)$

(C) $(x-2)(x+2)$

(D) $5(x-2)(x+2)$

(E) Answer not known
விடை தெரியவில்லை

182. Find the LCM :
மீ.பொ.ம. காண்க :
$16m, -12m^2n^2, 8n^2$

(A) $-16mn$

(B) $-16m^2n^2$

(C) $-48m^2n^2$

(D) $48m^2n^2$

(E) Answer not known
விடை தெரியவில்லை

183. A heater uses 3 units of electricity in 40 minutes. How many units does it consume in 2 hours?

ஒரு சூடேற்றி 40 நிமிடங்களில் 3 அலகுகள் மின்சாரத்தை பயன்படுத்துகிறது. இரண்டு மணி நேரத்தில் எத்தனை அலகுகள் மின்சாரத்தை பயன்படுத்தும்?

(A) 9 units
9 அலகுகள்

(B) 10 units
10 அலகுகள்

(C) 11 units
11 அலகுகள்

(D) 12 units
12 அலகுகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

184. 25% of 25% is

25% இன் 25% என்பது

(A) 6.25

(B) 0.625

(C) 0.0625

(D) 0.00625

(E) Answer not known
விடை தெரியவில்லை

185. Calculate the number of years on which the amount ₹ 16,500/- is matured to ₹ 22,935/- at the rate of simple interest 13% per annum.

ஆண்டுக்கு 13% தனிவட்டி வீதத்தில் ஒரு தொகை ₹ 16,500/– ல் இருந்து எத்தனை ஆண்டுகளில் ₹ 22,935/– ஆக உயரும்?

(A) 2

(B) 3

(C) 4

(D) 5

(E) Answer not known
விடை தெரியவில்லை

186. An amount at the rate of simple interest 12% per annum matured to ₹ 17,000/- in 3 years then find out the principal amount.

ஒரு தொகையானது 3 ஆண்டுகளில் 12% தனி வட்டி வீதத்தில் தொகை ₹ 17,000/– ஆகக் கிடைக்கிறது எனில் அந்த அசலைக் காண்க.

(A) ₹ 12,500/-
(B) ₹ 13,000/-
(C) ₹ 14,500/-
(D) ₹ 13,300/-
(E) Answer not known
விடை தெரியவில்லை

187. There is 50% increase in an amount in 4 years at simple interest. What will be the compound interest of ₹ 10,000 after 3 years?

ஒரு தொகை தனிவட்டியில் 4 ஆண்டுகளில் 50% அதிகரித்தால், ₹ 10,000க்கு 3 ஆண்டுகளில் கிடைக்கும் கூட்டு வட்டி யாது?

(A) ₹ 3,842
(B) ₹ 4,238
(C) ₹ 2,438
(D) ₹ 3,482
(E) Answer not known
விடை தெரியவில்லை

188. The present height of a tree is 847 cm if its height increases at 10% per annum. The height of the tree two years ago is

ஒரு மரத்தின் தற்போதைய உயரம் 847 செ.மீ அது ஆண்டுக்கு 10% வீதம் வளர்கிறது எனில், 2 ஆண்டுகளுக்கு முன் அதன் உயரத்தைக் காண்க.

(A) 770 cm
770 செ.மீ
(B) 700 cm
700 செ.மீ
(C) 630 cm
630 செ.மீ
(D) 560 cm
560 செ.மீ
(E) Answer not known
விடை தெரியவில்லை

189. Find the volume of a cylinder whose height is 35 cm and whose base area is 70 $m^2$.

ஓர் உருளையின் உயரம் 35 செ.மீ. மற்றும் அதன் அடிப்பரப்பு 70 $மீ^2$, எனில் அதன் கன அளவு யாது?

(A) 200 $cm^2$
200 $செ.மீ^2$

(B) 200 $cm^3$
200 $செ.மீ^3$

(C) 2450 $m^3$
2450 $மீ^3$

(D) 24.5 $m^3$
24.5 $மீ^3$

(E) Answer not known
விடை தெரியவில்லை

190. The area of a circle is 110 sq.cm. The area of a square inscribed in this circle will be?

ஒரு சதுரம் வட்டத்தினுள் அதன் நான்கு முனைகளும் தொடுமாறு அமைந்துள்ளது. அவ்வட்டத்தின் பரப்பு 110 ச.செ.மீ எனில் அதனுள் அமைந்த சதுரத்தின் பரப்பளவு யாது?

(A) 77 $cm^2$
77 $செ.மீ^2$

(B) 35 $cm^2$
35 $செ.மீ^2$

(C) 70 $cm^2$
70 $செ.மீ^2$

(D) $2\sqrt{35}$ $cm^2$
$2\sqrt{35}$ $செ.மீ^2$

(E) Answer not known
விடை தெரியவில்லை

191. The length of the rope by which a cow must be tethered in order that it may be able to graze an area of 9856 square metre is

கயிற்றால் கட்டப்பட்ட மாடு மேய்ந்த பகுதியின் பரப்பளவு 9856 சதுர மீட்டர் எனில் கயிற்றின் நீளம்

(A) 7 metres
7 மீட்டர்

(B) 8 metres
8 மீட்டர்

(C) 15 metres
15 மீட்டர்

(D) 56 metres
56 மீட்டர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

192. A is twice as good a workman as B and together they finish a piece of work in 24 days. In how many days will A alone finish the work?

A என்பவர் B ஐப் போல் இரு மடங்கு வேலை செய்பவர், மேலும் அவர்கள் இருவரும் இணைந்து ஒரு வேலையை 24 நாட்களில் முடிப்பார் எனில் A மட்டும் அவ்வேலையை முடிக்க எத்தனை நாட்களாகும்?

(A) 36 days
36 நாட்கள்

(B) 48 days
48 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 32 days
32 நாட்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

193. 4 men and 3 women can earn ₹ 12,500 in 5 days. 10 men and 6 women can earn ₹ 17,400 in 3 days. In what time will 5 men and 5 women earn ₹ 35,000/-?

4 ஆண்கள் மற்றும் 3 பெண்கள் ₹ 12,500ஐ 5 நாட்களில் வருமானம் ஈட்டுகிறார்கள். 10 ஆண்கள் மற்றும் 6 பெண்கள் ₹ 17,400-ஐ 3 நாட்களில் வருமானம் ஈட்டுகிறார்கள், எனில் 5 ஆண்கள் மற்றும் 5 பெண்கள் ₹ 35,000/-ஐ வருமானமாக ஈட்ட எத்தனை நாட்களாகும்?

(A) 6 days
6 நாட்கள்

(B) 8 days
8 நாட்கள்

(C) 10 days
10 நாட்கள்

(D) 12 days
12 நாட்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

194. There are 10 true or false questions in an examination, then these question can be answer in

ஒரு தேர்வில் 10 வினாக்கள் சரியா? தவறா? என்ற வகையில் உள்ளது எனில், அவ்வினாக்களுக்கு எத்தனை வகையில் விடையளிக்க முடியும்?

(A) 120 ways
120 வழிகள்

(B) 240 ways
240 வழிகள்

(C) 1024 ways
1024 வழிகள்

(D) 512 ways
512 வழிகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

195. Find the range of the following distribution.

கீழ்கண்ட பட்டியலின் விவரங்களைக் கொண்டு, அதன் வீச்சைக் காண்க.

| Age (in yrs) வயது (ஆண்டுகளில்) | 16-18 | 18-20 | 20-22 | 22-24 | 24-26 | 26-28 |
|---|---|---|---|---|---|---|
| No. of students மாணவர்களின் எண்ணிக்கை | 0 | 4 | 6 | 8 | 2 | 2 |

(A) 8 years
8 ஆண்டுகள்

(B) 6 years
6 ஆண்டுகள்

(C) 12 years
12 ஆண்டுகள்

(D) 10 years
10 ஆண்டுகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

196. If the words STOP, PEN and NEAR indicate 24, 10, 12. Then how will the word "ROSE" be indicated?

STOP = 24; PEN = 10; NEAR = 12 எனக் குறிப்பிட்டால் ROSE என்பதை எவ்வாறு குறிப்போம்?

(A) 19

(B) 20

(C) 18

(D) 22

(E) Answer not known
விடை தெரியவில்லை

197. If “LIFE” is coded as “2965” then “SAVE” will be coded as

ஒரு குறிப்பிட்ட குறியீடு மொழியில் “LIFE” என்ற வார்த்தைக்கு “2965” என்று குறியீடுச் செய்யப்பட்டால் “SAVE” என்ற வார்த்தையின் குறியீடு யாது?

(A) 1912 (B) 1901

(C) 9125 (D) 9120

(E) Answer not known
விடை தெரியவில்லை

198. Find the sum of
கூடுதல் காண்க.

$3 + 5 + 7 + .... + 71$

(A) 1296 (B) 1295

(C) 1294 (D) 1286

(E) Answer not known
விடை தெரியவில்லை

199. If $1^3 + 2^3 + 3^3 + .... + k^3 = 44100$ then find $1 + 2 + 3 + .... + k$

$1^3 + 2^3 + 3^3 + .... + k^3 = 44100$ எனில், $1 + 2 + 3 + .... + k$ ன் மதிப்புக் காண்க.

(A) 210 (B) 220

(C) 225 (D) 230

(E) Answer not known
விடை தெரியவில்லை

200. In a magic square given below each row, column and diagonal should have the same sum, find the values of $x$, $y$ and $z$

கீழ்காணும் மாயச் சதுரத்தில் நிரை, நிரல் மற்றும் மூலை விட்டத்தில் உள்ள எண்களின் கூடுதல் சமம் எனில், $x$, $y$ மற்றும் $z$ ன் மதிப்புகளைக் காண்க.

| | | |
|---|---|---|
| 1 | –10 | $x$ |
| $y$ | –3 | –2 |
| –6 | 4 | $z$ |

(A) $x = -7, y = -4, z = 0$

(B) $x = 0, y = -7, z = -4$

(C) $x = 0, y = -4, z = -7$

(D) $x = -4, y = 0, z = -7$

(E) Answer not known
விடை தெரியவில்லை